பிரதமசெயலாளர் செயலகம்,வடக்குமாகாண சபை

ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

A9 வீதி,கைதடி,யாழ்ப்பாணம்.
A9 පාර,කයිදඩි,යාපනය.
**A9 Road,Kaithady, Jaffna.**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


---

My No: NP/09/BDT/04/19/CIR-BDT/2019 Date : 11.10.2019

பாதீட்டுச் சுற்றுநிருப இலக்கம் : BDT/CIR/03/2019

செயலாளர்கள்,
பிரதிப் பிரதமசெயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

**2019 வருடத்தின் எஞ்சிய காலப்பகுதியின் போது அரச செலவினத்தினை முகாமைசெய்தல்**

2019 வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்களில் 15 சதவீதத்தினை சேமிப்பாக இனங்கண்டு செயற்படுவதற்கு BDT/CIR/02/2019 ஆம் இலக்க 12.07.2019 ஆம் திகதிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் மூலம் தங்களுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2. ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலினைத் தொடர்ந்து நாட்டில் பாதகமான பொருளாதார நிலைமை காணப்படுகின்ற சூழ்நிலையில் அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு, 2019 ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மூலதனச் செலவினத்தில் மேலும் 10 சதவீதத்தினை கட்டாயமாக சேமிக்க வேண்டுமென நிதியமைச்சின் BD/CBP/4/1/2-2020 ஆம் இலக்க 2019.09.24 ஆம் திகதிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

3. இப்பின்னணியில், முன்னுரிமையல்லாத மற்றும் இதுவரை ஆரம்பிக்கப்படாத முன்மொழிவுகள் உள்ளடங்கலாக தளபாடம்,அலுவலக உபகரணங்கள் போன்ற அத்தியாவசியமற்ற பொருட்களினை கொள்வனவு செய்தல் என்பவற்றை இனங்கண்டு அவற்றை அடுத்த வருடத்திற்கு பிற்போடுவதற்கு உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. மேலும், 2018.07.16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் கீழ் வாகனங்கள் கொள்வனவு மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டு உடன்படிக்கை இதுவரை செய்யப்படாதவை உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

4. இந்தவகையில், இவ்வருடத்தின் மீதமுள்ள காலப்பகுதிக்கான காசுப்பாய்ச்சலினை முகாமை செய்வதற்கு அனைத்து மாகாண அமைச்சுக்களும் திணைக்களங்களும் 2019 இன் அடுத்த 03 மாதங்களுக்கான (ஒக்டோபர்-டிசெம்பர்) செலவினத் திட்டத்தினை 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணத்திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

அ. பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

**அ.பத்திநாதன்**
**பிரதமசெயலாளர்,**
**வடமாகாணம்.**

பிரதிகள்:
1.ஆளுநரின் செயலாளர், வடமாகாணம் - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத்தருவதற்காக
2. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், வட மாகாணம் } தகவலுக்காக
3.பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வட மாகாணம் }

---


பிரதிப் பிரதமசெயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධානලේකම්
**DEPUTY CHIEF SECRETARY**

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කුමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir : 021 223 0451 (Ge Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com